

# "ரகுபதியை வாழ்த்த

ராஜ்

புதுக்கோட்டை திரு.மு.க.வில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இங்கு மாவட்டச் செயலாளர் பெரி.அரசு ஓர் அணியாகவும், முன்னாள் மத்திய அமைச்சர் ரகுபதி இன்னொரு அணியாகவும் இருப்பது தெரிந்ததே! ஆனால் இந்த இரு அணிகளின் சார்பிலும் புதுக்கோட்டையில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் போதுபோட்டிபோட்டுக்கொண்டுபோஸ்டர்கள் அடித்தும், டிஜிட்டல் பேனர்கள் வைத்தும் கலக்குவார்கள். ஒரு நாள் தி.மு.க. நிகழ்ச்சியில் பெரி.அரசின் தரப்பு ஆதரவு பிரமுகர்கள் புதுகை நகரத்தை விழாக்கோலமாக்கினால், வேறு ஒரு நாள் நிகழ்ச்சியில் ரகுபதியின் ஆதரவாளர்கள் புதுகை நகரில் அசத்தி விடுவார்கள். இந்த இரு அணியின் போட்டியால் புதுக்கோட்டையில் தி.மு.க. பொலிவுடன் இருப்பது போன்ற தோற்றம் எங்கும் நிறைந்திருக்கும்.

அதேநேரத்தில் அரசு அணியின் கை உள்ளூர் தி.மு.க.வில் ஓங்கியே இருக்கிறது. அதற்கு முழு முதற்காரணம் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின். அது மட்டுமின்றி ரகுபதியின் ஆதரவாளர்கள் மத்திய அமைச்சர் அழகிரியின் ஆதரவாளர்களாக முன்பு கட்சித் தேர்தல் நடைபெற்ற போது மாறியிருந்தார்கள். அது இன்னொரு காரணம். இது சென்ற உள்கட்சித் தேர்தலில் வெற்றி, தோல்விகளில் எதிரொலித்தது. ரகுபதி அணியில் இருந்தவர்கள்கூட (ஜாபர் அலி தவிர) அரசு அணிக்கு மாற, புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரி. அரசின் அணியைச் சேர்ந்தவர்களே உள்கட்சிப் பொறுப்புகளில் அதிக அளவில் வெற்றி பெற்றார்கள். இதனால் இன்றும்கூட கட்சி நிர்வாகிகள் அளவில் 'மாவட்டத்தில் எங்கும் அரசு அணியே' என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலைமையில்தான் இப்போதும் அதிரடி மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சர் ரகுபதி கொஞ்சம் கொஞ்சமாக தலைமையின் நம்பிக்கைக்குரியவராக மாறி வருகிறார். குறிப்பாக ஸ்டாலினுடன் முன்பு இருந்தது போல் மீண்டும் நெருக்கமாகியுள்ளார். இவரது அணியின் சார்பில் இங்கு தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளராக இருந்தவர் ஜாபர் அலி. இவர் அழகிரியின் ஆதரவாளர் என்று முத்திரை குத்தப்பட்டாலும், அவர் என்றைக்குமே ஸ்டாலினுக்கும் வேண்டியவராகவே இருந்திருக்கிறார். குறிப்பாக அவரது காரில்கூட முதல்வர் கருணாநிதி, துணை முதல்வர் ஸ்டாலின், மத்திய அமைச்சர் அழகிரி ஆகியோரின் படங்களை எப்போதும் வைத்திருப்பார். பாக்கெட்டில்கூட இந்த மூவரின் படங்கள்தான் இடம்பெற்றிருக்கும். ரகுபதி ஆதரவாளர் என்பதால் கட்சித் தேர்தலில் இவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை! ஆனாலும் கட்சித் தொண்டர்களிடம் இன்னமும் நெருக்கமாகவே இருக்கிறார். பல நேரங்களில் தங்கள் சொந்த வேலைகளுக்காக இன்றைக்கும் பெரும்பாலான தி.மு.க. தொண்டர்கள் ஜாபர் அலியையே நாடுகிறார்கள் என்ற பேச்சு புதுக்கோட்டை மாவட்டத்தில்



ஜாபர் அலி